375—

குற்றவியல் நீதிமன்றம் அமைத்தல்

***601—திரு. தா. உதயசூரியன் :**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கராபுரத்தில் குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. தா. உதயசூரியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த மாமன்றத்தில் வட்டத் தலைநகரத்தில் குற்றவியல் நீதிமன்றம் இருக்கவேண்டுமென்று முன்பு அறிவித்துள்ளார்கள். சங்கராபுரம் தாலுகாவாக உயர்ந்திருக்கிறது. ஆகவே அந்த வட்டத்திற்கு மறுபரிசீலனை செய்து குற்றவியல் நீதிமன்றம் அமைத்துத் தருவதற்கு அமைச்சரவர்கள் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், சங்கராபுரத்தில் குற்றவியல் நீதிமன்றம் அமைக்கவேண்டுமென்று 28-9-1994-ல் (குறுக்கீடு)...

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி : தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம் அல்ல சங்கராபுரம். விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டத்திலுள்ளது. முதலிலேயும் இதுபற்றி ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர் வந்தது. சங்கராபுரம், விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா : விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில், சங்கராபுரத்திலே குற்றவியல் நீதிமன்றம் அமைப்பது குறித்து சென்னை உயர்நீதிமன்றத்திலேயிருந்து 28-9-1994-ல் ஒரு பரிந்துரை வந்திருக்கிறது. அதனை 28-6-1995-ல் முந்தைய அரசு நிறுத்தி வைத்துவிட்டது. என்றாலும் அங்கே நீதிமன்றம் அமைப்பது குறித்து சென்னை உயர்நீதிமன்றம் மீண்டும் வலியுறுத்தியிருக்கிறது. இதுகுறித்து அரசு ஆய்வு செய்தபோது தொடராச் செலவினம் ரூ.10.25 லட்சம், தொடராச் செலவினம் ரூ. 3 லட்சம் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. இவற்றை அடுத்த ஆண்டு பார்ட்-2 ஸ்கீம்களில் எடுத்துக்கொள்ளலாம் என்று அரசு ஆய்வு செய்துகொண்டிருக்கிறது.

1997 மார்ச் 31]

திரு. தா. உதயசூரியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் எவ்வளவு செலவாகும் என்று இங்கே சுட்டிக்காட்டினார்கள். கள்ளக்குறிச்சியிலேயிருந்து பிரிந்ததுதான் சங்கராபுரம் வட்டம். கள்ளக்குறிச்சியிலே இரண்டு குற்றவியல் நீதிமன்றங்கள் இருக்கின்றன. ஆகவே, இந்தச் செலவைச் சொல்கின்ற மாண்புமிகு அமைச்சரவர்கள், கள்ளக்குறிச்சியிலுள்ள இரண்டு குற்றவியல் நீதிமன்றங்களிலிருந்து ஒன்றைப் பிரித்து, அந்த வட்டத்திற்குக் கொடுக்கவேண்டும். தென்னாற்காடு மாவட்டம் என்பது, வள்ளலார், விழுப்புரம்–இராமசாமி படையாச்சியார் மாவட்டம் என்று பிரிக்கப்பட்டது. அதிலே கள்ளக்குறிச்சியிலிருந்து பிரிந்ததுதான் சங்கராபுரம் வட்டம். ஆகவே, கள்ளக்குறிச்சியில் உள்ள இரண்டு குற்றவியல் நீதிமன்றங்களிலிருந்து, ஒரு குற்றவியல் நீதிமன்றத்தை சங்கராபுரம் வட்டத்திற்கு மாற்றித் தருவதற்கு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா : பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தை மாற்றி அமைத்தாலும், அதிலும் செலவினங்கள் இருக்கின்றன. அதற்கும் உயர்நீதிமன்றத்தினுடைய ஒப்புதலும், நிதித் துறையினுடைய ஒப்புதலையும் பெறவேண்டும். எனவேதான் அடுத்த ஆண்டு அதை நாங்கள் எடுத்துக்கொள்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினருக்கு நான் உறுதியளித்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 374, திரு. ம. சண்முகம், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

374—

வங்கிகளின் வளர்ச்சிப் பணிகள்

***3471—திரு. ம. சண்முகம் :**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிரதம நிலவள வங்கிகளில் பணியாளர்கள் நியமிக்கப் படாததால் வங்கிகளின் வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?